2023

කාර්ය සාධන වාර්තාව
நிதிச் செயலாற்றுகைக் கூற்று
PERFORMANCE REPORT

වනජීවී සංරක්ෂණ දෙපාර්තමේන්තුව
வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்
DEPARTMENT OF WILDLIFE CONSERVATION

වනජීවී හා වන සම්පත් සංරක්ෂණ අමාත්‍යාංශය
வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு
MINISTRY OF WILDLIFE AND FOREST RESOURCES CONSERVATION

வனசீவாசிகள் பாதுகாப்புத் திணைக்களம்

செயலாற்றுகை அறிக்கை - 2023

இலக்கம் 811/ஏ, ஜயந்திபுர வீதி, பத்தரமுல்ல

உள்ளடக்கம்

தொ.இல.		பக்கம்
	அத்தியாயம் 01	
	திணைக்களம் பற்றிய குறிப்பு / நிறைவேற்று சுருக்கம்	
1.1	**அறிமுகம்**	1
1.2	திணைக்களத்தின் தூரநோக்கும், செயற்பணியும், குறிக்கோள்களும்	2
1.3	திணைக்களத்தின் கீழ் காணப்படும் பிரதான பிரிவுகள், வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்கள் மற்றும் அவற்றின் முக்கிய கரும பணிகள்	4
1.4	நிறுவனக் கட்டமைப்பு	7
1.5	திணைக்களத்தின் கீழ் இயங்கும் நிதியங்கள்	8
	அத்தியாயம் 02	
	முன்னேற்றமும் மற்றும் தூரநோக்கும்	9-16
2.1	நிதி முன்னேற்றம் பற்றிய சுருக்க விபரம்	9
2.2	முக்கிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் நிதி முன்னேற்றம் பற்றிய விபரங்கள்	9
2.3	திரட்டு நிதியத்தினதும் மற்றும் வனசீவராசிகள் பாதுகாப்பு நிதியத்தினதும் கீழ் செயற்படுத்திய அபிவிருத்திப் பணிகள் முன்னேற்ற விபரம்	13
2.4	2023 ஆம் ஆண்டில் திணைக்களம் வழங்கிய விஷேட சேவைகள்	22
2.5	திணைக்களத்தின் குறிக்கோள்களை அடை எதிர்பார்க்கப்படும் இலக்குகளும் எதிர்நோக்கும் சவால்களும்	25-27
	அத்தியாயம் - 03	
	குறித்த ஆண்டின் ஒட்டுமொத்த நிதி செயலாற்றுகை	
3.1	**நிதி செயலாற்றுகைக் கூற்று**	28
3.2	நிதி நிலைக்கூற்று	29
3.3	காசுப் பாய்ச்சல் கூற்று	30
3.4	நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்	31
3.5	வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை	31
3.6	ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளின் பயன்பாட்டு செயலாற்றுகை	31
3.7	நி.பி.கு. இலக்கம் 208 இன் பிரகாரம் ஏனைய அமைச்சுக்களின் / திணைக்களங்களின் பிரதிநிதி என்ற வகையில் இந்தத் திணைக்களத்திற்கு மானியமாக கிடைத்த மானியங்கள்	35
3.8	நிதி சாராத சொத்துக்கள் அறிக்கையிடல் செயலாற்றுகை	35
3.9	கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை	36
	அத்தியாயம் - 04	
	செயலாற்றுகை சுட்டிகள்	
4.1	திணைக்களத்தின் செயலாற்றுகை சார்ந்த சுட்டிகள் (செயல் திட்டத்தின் அடிப்படையில்)	37
	அத்தியாயம் - 05	
	நிலையான அபிவிருத்தி இலக்குகளை (நிஅஇ) அடைந்து கொள்வதற்கான செயலாற்றுகை சார்ந்த சுட்டிகள்	
5.1	கண்டறிந்த நிலையான அபிவிருத்தி இலக்குகள்	38
5.2	நிலையான அபிவிருத்தி இலக்குகள் 14 மற்றும்15 ஆகியவற்றை அடைந்து கொள்ளலின் வெற்றியும் மற்றும் எதிர்நோக்கிய சவால்களும்	40
	அத்தியாயம் - 06	
	மனித வளங்கள் பற்றிய குறிப்பு	
6.1	ஆளணி முகாமைத்துவம்	41
6.2	திணைக்களத்தின் செயலாற்றுகை தொடர்பாக மனித வளப் பற்றாக்குறை அல்லது மிகையின் தாக்கங்கள்	41
6.3	மனித வளங்கள் அபிவிருத்தி	41
	அத்தியாயம் - 07	
7.1	இணக்கப்பாட்டு அறிக்கை	46-51

அத்தியாயம் 01

திணைக்களம் பற்றிய குறிப்பு / நிறைவேற்று சுருக்கம்

1.1 அறிமுகம்

இலங்கையில் உள்ள தேசிய தாவரங்களையும் மற்றும் விலங்குகளையும் பாதுகாப்பது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தேவையாகும். ஆகையால் இலங்கையின் கடலோரப் பகுதி உள்ளிட்ட உள்நாட்டு எல்லையினுள் காணப்படும் வனசீவராசி வளங்களை நீண்டகாலத்திற்கு பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல் ஆகிய முக்கிய பணிகள் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஆதலால் வன விலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்புக் கட்டளை சட்டத்தின் கீழ் இலங்கையினுள் ஒரு வனசீவராசிகள் பாதுகாப்பு ஒதுக்கப் பிதேச வலையமைப்பை தாபித்து முகாமை செய்கின்ற பொறுப்பும் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. அவ்வாறு தாபிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு ஒதுக்க நிலப் பிரதேசத்தின் (கடல் மற்றும் சமதரை பாதுகாப்பு ஒதுக்கம்) மொத்த அளவு 12500 சதுர கிலோ மீற்றர் என்ற பரப்பளவில் உள்ளது. இது அண்ணளவாக இலங்கையின் நிலப் பிரதேசத்தில் 18.9% வீதமளவில் காணப்படுகின்றது. இது வரையில் இலங்கையில் 40 தேசிய ஒதுக்கங்களும் மற்றும் 69 சரணாலயப் பிரதேசங்களும் மற்றும் 109 வனசீவராசிகள் பாதுகாப்பு ஒதுக்கப் பிரதேசங்களும் பிரகடனப் படுத்தப் பட்டுள்ளன.

இந்தப் பாதுகாப்பு ஒதுக்கப் பிரதேசங்களின் வலையமைப்பு பரந்துள்ள விதம் பற்றி கீழே குறிப்பிடப் பட்டுள்ளது.

பாதுகாப்பு ஒதுக்கப் பிரதேசங்களின் வகை		**தற்பொழுது பிரகடனப்படுத்தப் பட்டுள்ள பாதுகாப்பு ஒதுக்கப் பிரதேசங்களின் எண்ணிக்கை**
தேசிய பாதுகாப்பு ஒதுக்கங்கள்	கடும் இயற்கை பாதுகாப்பு ஒதுக்கப் பிரதேசங்கள்	03
	தேசிய பூங்காக்கள்	26
	இயற்கைப் பாதுகாப்பு ஒதுக்கப் பிரதேசங்கள்	09
	யானைகள் ,lk; khWk; பகுதி	01
மொத்தம்		39
சரணாலயப் பிரதேசங்கள்		69
யானைகள் கட்டுப்பாட்டு ஒதுக்கப் பகுதி		01
ஒட்டுமொத்தம்		109

வன விலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்புக் கட்டளை சட்டத்தின் கீழ் வனசீவராசிகள் பாதுகாப்பு ஒதுக்கப் பகுதிகளுக்கு அப்பாலுள்ள பிரதேசங்களில் காணப்படுகின்ற வனசீராசி வளங்களைப் பாதுகாக்கும் பொருட்டு சட்டஏற்பாடுகள் உள்ளனன. ஆகையால் அதன் நிமித்தம் தேவையான சட்டமுறையான அதிகாரமும் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப் பட்டுள்ளது.

பல்லினத்துவத்தில் செளிப்பாகவுள்ள இந்த நாட்டின் உயிரியல் வளங்களையும் மற்றும் அவற்றின் இயற்கை வாழ்விடங்களையும் பாதுகாக்கும் பணிக்கு மேலதிகமாக வனசீவராசிகள் பாதுகாப்பு ஒதுக்கப் பிரதேச வலையமைப்பு இலங்கையினுள் காணப்படும் விவசாய தொழிலுக்கும் மற்றும் மின் உற்பத்திற்கும் முக்கியத்துவம் வாய்ந்த அதிகளவான வலையமைப்புகளினதும் மற்றும் அவற்றின் நீரேந்து பிரதேசங்களினதும்

நீண்டகாலப் பாதுகாப்பையும் இந்தத் திணைக்களம் உறுதி செய்கின்றது. சேனாநாயக்க சமுத்திரம் அடங்கலாக கல் ஓயா கரையோர நீர்த்தேக்கங்கள், அதிக பல மகாவலி நீர்த்தேக்கங்கள், மத்திய மாகாணத்திலும் மற்றும் வட மத்திய மாகாணத்திலும் அமைந்திருக்கின்ற மகாவலி கங்கை நீரை பெறுகின்ற நீர்த்தேக்கங்கள், உடவளவை, மவ்ஆற, லுணுகம்வெஹர மற்றும் வெஹரகல ஆகிய இந்த நாட்டின் தென் பிரதேசத்தில் காணப்படுகின்ற நீர்த்தேக்கங்கள் என்பன இந்த வனசீவராசிகள் பாதுகாப்பு ஒதுக்க வலயத்தினுள் அமைந்துள்ளன. மேலும், பராக்கிராம சமுத்திரம், கவுதுல்ல, மின்னேரியா, கிரத்தலை, பதவிய, கலாவெவ மற்றும் யோத வெவ போன்ற பிரதானமான பல குளங்களும் நீரேந்து பிரதேச வனசீவராசிகளின் ஒதுக்கப் பாதுகாப்பு பிரதேசங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு வனசீவராசிகளின் ஒதுக்கப் பாதுகாப்புப் பிரதேசங்களினுள் காணப்படுகின்ற விவசாயத்திற்கும் மற்றும் மின் உற்பத்திற்கும் முக்கியத்துவம் வாய்ந்த 40 எண்ணிக்கைக்கும் அதிகமான வன நீர்த்தேக்கங்கள் உள்ளன. மேலும் மகாவலி கங்கை, களணி கங்கை, களு கங்கை மற்றும் வளவை கங்கை ஆகிய பிரதான கங்கைகளின் மேல் நீரேந்து பரப்புகள், சிவனொலிபாத மலை வனாந்திர இயற்கை ஒதுக்கம், ஹோர்ட்டென்தென்ன தேசிய பூங்கா போன்றன வனசீவராசிகள் பாதுகாப்பு ஒதுக்கப் பகுதியில் அமைந்துள்ளன.

மேலும் இலங்கையின் இயற்கை சுற்றாடலை அண்மித்த சுற்றுலா தொழிலின் பிரதான வாய்ப்பும் வனசீவராசி பாதுகாப்பு ஒதுக்கப் பகுதியில் உள்ள வனசீவராசி வளங்களாக கருதப்படுகின்றன. வனசீவராசி பாதுகாப்புப் பிரதேசத்தை அண்மித்த பகுதி சுற்றுலா தொழிலின் ஊடாக 2023 ஆம் ஆண்டு காலப் பகுதியில் அண்ணளவாக 5,723.34 மில்லியன் ரூபா ஈட்டப்பட்டுள்ளது.

1.2 திணைக்களத்தின் தூரநோக்கும், செயற்பணியும், குறிக்கோள்களும்

தூரநோக்கு

- தற்கால மற்றும் எதிர்கால சந்ததியினரின் நிமித்தம் வனசீவராசி மரபுரிமைகளை பாதுகாத்தல்

செயற்பணி

- ஒத்துழைப்பான ஒரு முகாமைத்துவத்தின் மூலம் வனசீவராசி மரபுரிமைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்

குறிக்கோள்கள்

- தேசிய மற்றும் சர்வதேச கொள்கைகளுக்கு ஏற்ற வகையில் வனசீவராசி வளங்களைப் பாதுகாக்கும் முகமாக தேசிய மூலோபாயத் திட்டங்களையும் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களையும் தயாரித்தல்

- விஷேட விஞ்ஞான முக்கியத்துவம் வாய்ந்த ஸ்தலங்கள் உள்ள நாட்டினுள் காணப்படும் சகல இயற்கை சுற்றாடல் முறைமைகளும் உள்ளடங்கும் வகையில் ஒதுக்கப் பகுதிகளை பாதுகாத்து அவற்றை காலத்திற்கேற்ப வனசீவராசி இனங்களின் நிலையான அளவை பேணிச்செல்லக்கூடிய வகையில் எண்ணிக்கையையும் அளவையும் அதிகரிக்கச்செய்து அவற்றுக்கு இடையில் தொடர்பை தாபித்தல்

- மிகப் பொருத்தமான ஆராய்ச்சி தரவுகளினதும் மற்றும் தகவல்களினதும் அடிப்படையில் பாதுகாப்பு ஒதுக்க பிரதேசங்களை இனங்கண்டு, அவற்றை வகைப்படுத்தி, முகாமை செய்வதன் மூலம் அவற்றின் நிலைகளை இற்றைப்படுத்திப் பாதுகாத்தல்

- அழிந்து வரும் உயிரினங்களை பாதுகாப்பதற்கான பாதுகாப்புத் திட்டங்களை தயாரித்து அத்தகைய திட்டங்களை செயற்படுத்தல்

- அந்தந்தப் பாதுகாக்கப்பட்ட பகுதிகளுக்குள் உள்ள சுற்றாடல் முறமைகளை பாதுகாக்கும் போது சுற்றாடல்நேய-சுற்றுலா நடவடிக்கைகளுக்காக காணப்படுகின்ற வாய்ப்புகளைப் பயன்படுத்துவதை எளிதாக்குதல்

- நாட்டில் வனசீவராசி வளங்களை சட்டவிரோதமாகப் பயன்படுத்துவதைக் குறைக்கும் வகையில் வனவிலங்கு மற்றும் தாவர பாதுகாப்பு ஒழுங்குவிதிகளையும் மற்றும் ஏனைய விதிமுறைகளையும் அமுல்படுத்துதல்

- இலங்கையில் வனசீவராசி வளங்களின் முகாமைத்துவத்திற்கான விஞ்ஞான அறிவியல் ஆராய்ச்சிகளை ஊக்குவித்தல்

- பயிற்சி, ஊக்கம் மற்றும் உந்துதல் ஆகியவற்றின் மூலம் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் ஊழியர்களின் திறனை மேம்படுத்துதல்

- கல்வி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களின் மூலம் பாதுகாப்பில் பொதுமக்களின் பங்களிப்பை அதிகரித்தல்

- பாதுகாப்பு பிரதேசங்களை சுற்றி வசிக்கும் மக்கள் பாதுகாப்பு பகுதிகளில் தங்கியிருக்கும் நிலையை குறைப்பதன் மூலம், அந்த மக்களின் சமூக-பொருளாதார நிலைமைகளை மேம்படுத்தி பாதுகாப்பிற்கு அவர்களின் பங்களிப்பை அதிகரித்தல்

1.3 திணைக்களத்தின் கீழ் காணப்படும் பிரதான பிரிவுகள், வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்கள் மற்றும் அவற்றின் முக்கிய கரும பணிகள்

வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் தூரநோக்கினதும் மற்றும் செயற்பணியினதும் பிரகாரம் செயற்படும் பொருட்டு, தலைமை அலுவலக அளவில் 08 முக்கிய தொழில் நுட்பப் பிரிவுகளும், 12 பிராந்திய வனசீவராசி பிராந்திய அலுவலகங்களும் உள்ளன. இந்த பிரிவுகளால் மேற்கொள்ளப்படும் முக்கிய செயற்பாடுகள் மற்றும் பொறுப்புகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

வெளிகல அலுவலகங்கள்

அலுவலக பிரிவுகள்;	**நிறுவப்பட்டுள்ள அலுவலக எண்ணிக்கை**
பிராந்திய அலுவலகங்கள்;	13
பிராந்திய kpUf itj;jpa gphpT	08
மிருக வைத்தியசாலை	01
யானைகள் பராமரிப்பு நிலையம்- உடவளவ	0l
யானைகள் தடுப்பு தளம்- உடவளவ	0l
யானைகள் கட்டுப்பாட்டு பிரிவு	04
தேசிய புங்காஅலுவலகம்	17
சுயனெநபைையடய வுசயைைைபெ ஊநவெநச ரன்தெணிகள பயிற்சி நிலையம்	0l
வனசீவராசிகள் வட்டார அலுவலகம்	74
வனசீவராசிகள் பீட்டு அலுவலகம்	85

1.3. தலைமை அலுவலக gphpTfs;

1.3.1 தலைமை அலுவலகம்

- திட்டமிடல் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பப் பிரிவு
- இயற்கை வளங்கள் முகாமைத்துவப் பிரிவு
- சட்ட அமுலாக்கல் பிரிவு
- யானைகள் பாதுகாப்புப் பிரிவு
- ஆராய்ச்சி மற்றும் பயிற்சிப் பிரிவு
- சுற்றுலா சேவைகள் முகாமைத்துவ சுற்றாடல் சுற்றுலா மற்றும் விலங்குதொகை பிரிவு

- வனசீவராசிகள் சுகாதார முகாமைத்துவப் பிரிவு
- பொறியியல் பிரிவு
- மனித வளங்கள் அபிவிருத்திப் பிரிவு
- நிதிப் பிரிவு

1.3.2 கள அலுவலகங்கள்

- பிராந்திய அலுவலகம் - 13
- பிராந்திய கால்கடைகள் மருத்துவப் பிரிவு - 08
- மிருக வைத்தியசாலைகள் - 01
- உடவளவை யானைகள் இல்லம்
- உடவளவை யானைகள் சரணாலயம்
- யானைகள் பாதுகாப்புப் பிரிவு - 04
- தேசிய பூங்கா தலைமையகம் - 17
- இரந்தினிகல பயிற்சி நிலையம்
- வனசீவராசிகள் வனப் பாதுகாப்பு அலுவலகம் - 74
- வனசீவராசிகள் பாதுகாப்பு அலுவலகம் - 85

1.3.3 திட்டமிடல் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பப் பிரிவு

- வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் வருடாந்த செயல் திட்டத்தை தயாரித்தல்
- விஷேட அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு பணிகளுக்கான கருத் திட்ட முன்மொழிவுகளை தயாரித்தல்
- திணைக்களத்தின் மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த அறிக்கைகளையும், ஆண்டு செயலாற்றுகை அறிக்கையையும் தயாரித்தல்
- திணைக்களத்தின் இணையத்தளமான www.dwc.gov.lk ஐ இற்றைப்படுத்தி பேணுதல்
- நாடளாவிய வானொலி தொடர்பு முறைமை மற்றும் உள்ளக தொலைபேசி வலையமைப்பு முறைமை ஆகியவற்றை பராமரித்தல், முகாமை செய்தல் மற்றும் மேம்படுத்தல்
- வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் நாடளாவிய கணினி வலையமைப்பை முகாமை செய்தல், பராமரித்தல் மற்றும் மேம்படுத்தல்
- தேசிய பூங்காக்களில் அனுமதி சீட்டுக்கள் வழங்குவதை கணினிமயமாக்குதல் மற்றும் GIS அலகை முகாமை செய்தல்

1.3.4 இயற்கை வளங்கள் முகாமைத்துவப் பிரிவு

- பாதுகாப்பு ஒதுக்கப் பிரதேசங்களுக்கான முகாமைத்துவ திட்டங்களை தயாரித்தல் மற்றும் திருத்தியமைத்தல்
- வளங்களின் பட்டியலை தயாரித்தல் மற்றும் அதனை இற்றைப்படுத்தல்
- பாதுகாப்பு ஒதுக்கப் பிரதேசங்களின் வலையமைப்பை பரிசீலித்தல், பிரகடனப்படுத்தல், எல்லைகளை அளவிடுதல் மற்றும் எல்லைகளை குறியிடுதல்
- வனசீவராசிகளின் வாழ்விடங்களின் முகாமைக்கான கொள்கைகளை தயாரித்தல் மற்றும் பின்னூட்டல் செய்தல்
- ஆக்கிரமித்து வளர்கின்ற தாவரங்களுக்கான விஷேட கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை செயற்படுத்தல்
- வனத் தீ படலங்களினதும் வனசீவராசிகளின் வாழ்விடங்களினதும் கட்டமைப்பை முகாமை செய்தல்
- சுற்றாடல் மாசடைவதை கட்டுப்படுத்தல், வனசீவராசிகளை விஷேடமாக பாதுகாக்கும் பாதுகாப்பு திட்டங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் கண்காணித்தல்
- பாதுகாப்பு ஒதுக்கப் பிரதேசங்களில் உத்தேச அபிவிருத்தி செயற்பாடுகளுக்கும் மற்றும் நாட்டின் அபிவிருத்தி கருத் திட்டங்களுக்கும் சுற்றாடல் சாத்தியவள ஆய்வுகளை நடத்துதல்

1.3.5 சட்ட அமுலாக்கல் பிரிவு

- வனவிலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு கட்டளை சட்டத்தை நடைமுறைப்படுத்தல் மற்றும் துறை சார்ந்த களப் பணியாளர்களின் தொடர்புடைய கடமைகளுக்கு தேவையான ஆதரவை வழங்குதல் மற்றும் சட்டத்தின் கீழ் பதிவு செய்ய வேண்டிய பதிவுகளை பதிவு செய்தல் மற்றும் அனுமதிப் பத்திரங்களை வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

- வனவிலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு கட்டளை சட்டத்திற்கு தேவையான திருத்தங்களை மேற்கொண்டு, அதன் கீழ் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளை தயாரித்தல்
- சட்டமா அதிபரின் திணைக்களம் மற்றும் சட்டத்தை அமுலாக்குவதுடன் தொடர்புடைய ஏனைய அரசாங்க நிறுவனங்கள் என்பவற்றுடன் ஒருங்கிணைந்து தொழிற்படுதல்
- CITES சமவாயத்தின் கீழ் அனுமதிப் பத்திரங்களை வழங்கல்

1.3.6 யானைகள் பாதுகாப்புப் பிரிவு

- யானைகள் பாதுகாப்பு தேசிய கொள்கைகளை செயற்படுத்தல், காட்டு யானைகள் பற்றிய தரவுகளையும் மற்றும் தகவல்களையும் சேகரித்து முகாமை செய்தல் மற்றும் இற்றைப் படுத்தல்
- காட்டு யானைகள் நுழைகின்ற பிரதேசங்களையும் அந்த நுழைவாயில் பகுதிகளையும் பாதுகாக்கும் வகையில் காட்டு யானைகள் பாதுகாப்பு பிரதேசங்களை தாபித்தல்
- காட்டு யானைகளினால் ஏற்படும் இழப்புகளுக்கு நஷ்டஈடுகளை வழங்குதல்
- மக்கள் வாழும் பகுதிகளுக்குள் காட்டு யானைகள் நுழையாமல் இருக்கும் வகையில் மின் வேலிகள், உயிரியல் ரீதியான பாதுகாப்பு முறைமைகள் மற்றும் ஏனைய நவீன தொழில் நுட்ப முறைமைகள் என்பவற்றின் ஊடாக பௌதீக ரீதியில் தடுக்கும் வசதிகளை தாபித்தல்
- காட்டு யானைகளை கட்டுப்படுத்தல், அதற்கு தேவையான பொருட்களை கொள்வனவு செய்தல்

1.3.7 ஆராய்ச்சி மற்றும் பயிற்சிகள் பிரிவு

- வனசீவராசிகள் திணைக்களத்தின் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை திட்டமிட்டு செயற்படுத்தல் மற்றும் பல வெளித் தரப்புகள் மேற்கொள்ளும் ஆராய்ச்சிகள் தொடர்பான அறிவுரைகளையும் மற்றும் அனுமதிகளையும் வழங்குதல்
- வனசீவராசிகள் திணைக்களத்தின் வெளிநாட்டுப் பயிற்சி மற்றும் மாநாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றுக்கு அலுவலர்களை அனுப்ப நடவடிக்கை எடுத்தல்
- பாடசாலை மாணவர்கள், அரசாங்க ஊழியர்கள் மற்றும் கிராமிய மக்கள் ஆகியோரை விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களையும் மற்றும் கண்காட்சி நிகழ்ச்சித் திட்டங்களையும் ஏற்பாடு செய்து நடத்துதல்
- தேசிய வனசீவராசிகள் பயிற்சி கேந்திர நிலையத்தின் செயற்பாடுகளை கண்காணித்து அந்த செயற்பாடுகளை நிருவகித்துச்செல்லல்
- திணைக்களத்தின் பிரசார மற்றும் ஊடக நிகழ்ச்சித் திட்டங்களை தயாரித்து அவற்றை செயற்படுத்தல்

1.3.8 சுற்றுலா சேவைகள் முகாமைத்துவ சுற்றாடல் சுற்றுலா மற்றும் விலங்குதொகை பிரிவு

- சுற்றுலா சேவைகள் சார்ந்த திட்டங்களையும் மற்றும் மதிப்பீடுகளையும் தயாரித்தல், புதிய சுற்றுலாப் பொதிகளை அறிமுகப்படுத்தல் மற்றும் சுற்றுலா சார்ந்த செயற்பாடுகளை பல்லினப்படுத்தல்
- சுற்றுலா சேவைகளை வழங்கல் மற்றும் சுற்றாடல் செயற்பாடுகளை ஊக்குவித்தல்
- பாதுகாப்பு ஒதுக்கப் பிரதேசங்களிலும் மற்றும் அவற்றை அண்மித்த பகுதிகளிலும் சுற்றுலா சேவைகள் தொடர்பு நிலையங்களை தாபித்தல்
- பாதுகாப்பு ஒதுக்கப் பிரதேசங்களின் அடிப்படையில் அந்தப் பகுதிகளில் வாழும் மக்கள் தங்கியிருக்கும் நிலையை குறைக்கும் முகமாக அந்த மக்களை பாதுகாப்பு ஒதுக்கப் பிரதேச முகாமைத்துவத்திற்கு பங்களிக்கச்செய்தல்
- கல்வி மற்றும் வியாபிப்பு நிகழ்ச்சித் திட்டங்களின் மூலம் பொது மக்களுக்கு பாதுகாப்பு பற்றி விழிப்பூட்டுதல்

1.3.9 வனசீவராசிகள் சுகாதார முகாமைத்துவப் பிரிவு

- வனசீவராசிகளின் சுகாதார நிலைமைகளையும் நோய் நிலைமைகளையும் பரிசீலித்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- வனசீவராசிகளின் மிருக மருத்துவ பாதுகாப்பு தொடர்பாக பயனுள்ள மற்றும் விரைவான பதிலீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- வனசீவராசிகள் இறந்த பின் இறப்புக்கான காரணங்களை கண்டறிய பரிசோதனைகளை நடத்துதல்
- நலன்புரி சம்பந்தமான விடயங்களை கவனித்து தரமான முறையில் வளர்க்கவும் மற்றும் வன விலங்குகள் மக்களை தாக்கும் பிரச்சினைகளை கட்டுப்படுத்தவும் பங்களித்தல்

- வனசீவராசிகளின் புனர்வாழ்வு நிலையங்களையும் மற்றும் யானைகள் இங்லங்களையும் முகாமை செய்தல்
- வன விலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு கட்டளை சட்டத்தின் சட்டஏற்பாடுகளுக்கு இணங்க தேவையான சான்றிதழ்களை வழங்குதல் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உதவுதல்

1.3.10 பொறியியல் பிரிவு

- பாதுகாப்பு ஒதுக்கப் பிரதேசங்களினுள் காணப்படும் பௌதீக வசதிகளை மேம்படுத்தல் மற்றும் கட்டிடங்கள் தொடர்பான திட்டங்களை செயற்படுத்தல்
- பாதுகாப்பு ஒதுக்கப் பிரதேசங்களினுள்ளும் அவற்றை அண்மித்த பகுதிகளினுள்ளும் வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு சொந்தமான கட்டிடங்களையும் மற்றும் நிர்மாணங்களையும் பராமரித்தல் மற்றும் வீதி முறைமைகளை நிர்மாணித்தல் மற்றும் அவற்றை பராமரித்தல்

1.3.11 மனித வளங்கள் அபிவிருத்திப் பிரிவு

- மனித வளத் திட்டங்களையும் மற்றும் பொது நிருவாகத் திட்டங்களையும் தயாரித்தல்
- பதவியணிக்கான ஊழியர்களை ஆட்சேர்த்துக் கொள்ளல், பதவியுயர்வுகளை வழங்குதல், பதவி வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுத்தல்
- பதவியணியின் அலுவலர்களை இடமாற்றம் செய்தல், ஒழுக்காற்று சார் நடவடிக்கைகளை மேற்கொள்ளல், சேவையை நீடித்தல், ஓய்வுபெறச்செய்தல், ஓய்வூதிய சம்பளங்கள் மற்றும் விதவைகள் மற்றும் அநாதைகள் நிதியம் சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- ஊழியர்களின் செயலாற்றுகை சார் விடயங்களை கையாளுதல், சம்பள படியேற்றங்களை செலுத்தல், திடீர் விபத்துக்களின் போது நஷ்டஈட்டுக் கொடுப்பனவுகளை செலுத்தல்
- போக்குவரத்து விடயங்களை கண்காணித்தல் மற்றும் கள கட்டிடங்களை நிர்மாணித்தல் மற்றும் அவற்றை பழுதுபார்த்தல்

1.3.12 நிதிப் பிரிவு

- திணைக்களத்தின் வருமான மற்றும் செலவின தலைப்புகளினதும் மற்றும் வனசீவராசிகள் பாதுகாப்பு நிதியத்தினதும் மதிப்பீடுகளை தயாரித்தல்
- பொதுத் திறைசேரியிலிருந்து வசக்கட்டுநிதிகளை பெற்றுக் கொள்ளல் மற்றும் பிராந்திய அலுவலகங்களுக்கு பெற்றுக்கொடுத்தல், பிராந்திய அலுவலகங்களின் வசக்கட்டுநிதிகளை மீளளித்தல், சகல கிடைப்பனவுகளையும் கொடுப்பனவுகளையும் கணக்கீடு செய்வதற்கு அரசாங்க நிதித் திணைக்களத்திற்கான மாதாந்த அறிக்கைகளை தயாரித்தல் மற்றும் மாதாந்த அறிக்கையிடுகைகளையும் மாதாந்த நிதிக் கூற்றுக்களையும் திறைசேரியின் கணனி அச்சீட்டுப் பதிவுகளுடன் ஒத்தீட்டுப் பார்த்தல்
- வருடாந்த வருமானக் கூற்றுக்களையும், செலவினக் கூற்றுக்களையும், வனசீவராசிகள் பாதுகாப்பு நிதியத்தின் கணக்குகளையும், அரசாங்க ஊழியர்கள் முற்பண பீ கணக்கையும் மற்றும் பொது வைப்புகளுக்கான கணக்குகளையும் தயாரித்து கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்கு சமர்ப்பித்தல்
- தலைமை அலுவலகத்தின் சகல கொள்வனவு செயற்பாடுகளையும் மற்றும் களஞ்சியசாலை செயற்பாடுகளையும் கண்காணித்தல் மற்றும் நிருவகித்தல்
- கணக்காய்வாளர் நாயகம் வெளியிடும் சகல கணக்காய்வு விசாரணைகளுக்கும் மற்றும் பொதுக் கணக்குகள் பற்றிய குழுவின் விசாரணைகளுக்கும் பதில் அளித்தல்

1.3.13. சர்வதேச பொருத்தனைகள்

- வன விலங்குகளினதும் தாவரங்களினதும் ஆபத்தான இனங்களின் சர்வதேச வணிகம் பற்றிய பொருத்தனை (CITES) - (CITES – Convention on International Trade in Endangered Species of Wild Fauna and Flora)
- சதுப்புநிலங்கள் பற்றிய பொருத்தனை (ரம்ஷார் பொருத்தனை) - (Convention on Wetlands / Ramsar Convention)
- வன விலங்குகளின் இடம்பெயரும் இனங்களை பாதுகாப்பது பற்றிய பொருத்தனை (CMS பொருத்தனை) - (Conventon on the Conservation of Migratory Species of Wild Animals / Bonn Convention)

1.4. நிறுவனக் கட்டமைப்பு



1.5 திணைக்களத்தின் கீழ் இயங்கும் நிதியங்கள்

வனசீவராசிகள் பாதுகாப்பு நிதியம் (வ.பா.நி.)

வன விலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு கட்டளை சட்டத்தின் சட்டஏற்பாடுகள் பிரகாரம் இலங்கையினுள் வனசீவராசிகளை பாதுகாக்கும் செயற்பாடுகளின் நிமித்தம் உதவிகளை பெற்றுக் கொள்ளும் நோக்கில் 1967 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டுள்ள இந்த நிதியத்தின் குறிக்கோள்கள் பின்வருமாறு காணப்படும்.

- வனசீவராசிகளை பாதுகாப்பதற்கும் மற்றும் பராமரிப்பதற்கும் தேவையான மக்களின் பங்களிப்பையும் மற்றும் உதவியையும் அதிகரிக்கச்செய்தல்
- வனசீவராசிகளின் பாதுகாப்பு ஒதுக்கப் பிரதேசங்களை பரிபாலணம் செய்தல்
- வனசீவராசிகளை பாதுகாக்கும் முகமாக வழங்கப்படும் பங்களிப்பை மதிக்கும் பொருட்டு வனசீவராசிகள் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கும், பொது மக்களுக்கும் சன்மானங்கள் மற்றும் ஏனைய பாராட்டு தொகைகள் என்பவற்றை வழங்குதல்
- வனசீவராசிகளுக்கு எதிராக புரியப்படும் குற்றங்கள் தொடர்பான தகவல்களை வழங்கும் நபர்களுக்கு பாராட்டுக் கொடுப்பனவுகளை வழங்குதல்

அத்தியாயம் 02

முன்னேற்றமும் மற்றும் தூரநோக்கும்

2.1 நிதி முன்னேற்றம் பற்றிய சுருக்க விபரம்

2.1.1 திரட்டு நிதியம்

செலவின வகுதி	2023 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுத் தொகை (ரூ) மில்லியன்	2023.12.31 ஆம் திகதிக்கான செலவினம் (ரூ) மில்லியன்	நிதி முன்னேற்றம் (%)
மூலதன செலவினம்	260.00	215.45	82.87
மீண்டெழும் செலவினம்	2,103.00	2,029.54	96.51
மொத்தம்	2,363.00	2,244.99	95.01

2.1.2 வனசீவராசிகள் பாதுகாப்பு நிதியம்

செலவின வகுதி	2023 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுத் தொகை (ரூ) மில்லியன்	2023.12.31 ஆம் திகதிக்கான செலவினம் (ரூ) மில்லியன்	நிதி முன்னேற்றம் (%)
மூலதன செலவினம்	574.97	574.89	99.98
மீண்டெழும் செலவினம்	2,099.72	2,098.89	99.96
மொத்தம்	2,674.69	2,673.78	99.96

2.2 முக்கிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் நிதி முன்னேற்றம் பற்றிய விபரங்கள்

2.2.1 திரட்டு நிதியம்

செலவினத் தலைப்பு இலக்கம்	நிகழ்ச்சித் திட்டம்	நிதியேற்பாடு (ரூ)	நிதி முன்னேற்றம்	
			(ரூ. மில்லியன்)	%
மூலதன சொத்துக்கள் மேம்பாடு மற்றும் புனர்நிர்மாணம்				
284-01-01-2001	கட்டிடங்களினதும் மற்றும் நிர்மாணங்களினதும் பழுதுபார்ப்பு	10.00	9.38	94
284-01-01-2002	இயந்திர உபகரணங்களின் பழுதுபார்ப்பு	2.00	1.98	99
284-01-01-2003	வாகனங்களின் பழுதுபார்ப்பு	10.00	9.87	99

மூலதன சொத்துக்கள் கொள்வனவு				
284-01-01-2105	காணி மற்றும் காணிகளை மேம்படுத்தல் (பாதுகாப்புப் பிரதேசங்களினுள் எல்லைக் கம்பங்களை நடுதல்)	6.00	3.65	61
284-01-01-2401	மனித வளங்களின் அபிவிருத்தி	7.00	7.00	100
284-01-01-2506	பாதுகாப்பு ஒதுக்கப் பிரதேசங்களின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி	5.00	3.49	69.8
284-01-01-08-2105	மின்சார வேலிகள் நிர்மாணம்	100.00	83.91	84
284-01-01-09-2506	பாதுகாப்பு ஒதுக்கப் பிரதேசங்களின் வாழ்விடங்கள் போஷித்தல்	80.00	67.64	85
284-01-01-10-2506	பாதுகாப்பு ஒதுக்கப் பிரதேசங்களின் வீதி முறைமை மேம்பாடு மற்றும் பராமரிப்பு	20.00	8.51	43
284-01-01-15	வில்பத்து தேசிய சரணாலயத்தை அண்மித்த பகுதி தாக்க வலய முகாமைத்துவ கருத் திட்டம் (GIZ)	20.00	20.00	100
	முழு மொத்தம்	**260.00**	**215.43**	**82.87**

2023.12.31 ஆம் திகதிக்கான விஷேட வரவுசெலவுத் திட்ட முன்மொழிவின் கீழ் உள்ள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் நிதி முன்னேற்றம் - இல்லை.

2.2.2 வனசீவராசிகள் பாதுகாப்பு நிதிய நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னேற்ற சுருக்க விபரம்

செலவின தலைப்பு	விபரம்	மதிப்பீடு (ரூ.)	செலவு (ரூ.மி.)	நிதி முன்னேற்றம் (%)
மீண்டெழும் செலவினம்				
3000	தன்னார்வ வழிகாட்டல் கொடுப்பனவுகள்	95.00	94.97	100
3002	பிரயாண செலவுகள்	110.00	109.93	100
3003	எரிபொருள் செலவுகள்	163.38	163.37	100
3005	சன்மான கொடுப்பனவுகள் (நீதிமன்ற தண்டப் பணங்களிலிருந்து)	24.69	24.68	99
3006	யானை எரி செலவுகள்	5.16	5.15	100
3007	பொது மக்களுக்கு விலங்குகளினால் ஏற்படும் பாதிப்புகளுக்கான நஷ்டஈடுகள்	246.23	246.21	100
3008	யானை வெடிகளின் கொள்வனவு	301.46	301.45	100
3009	யானைகளை விரட்டுவதற்கான செலவுகள்	10.79	10.79	100
3010	விலங்குகளுக்கான தீனி	135.86	135.86	100
3011	சேவைக் கட்டணங்கள்	454.38	454.37	100
3012	வாகனங்களின் பழுதுபார்ப்பு	153.00	152.99	100
3013	மின்சார மற்றும் தண்ணீர் கட்டணங்கள்	40.05	40.03	100
3014	துப்பாக்கி அனுமதிப் பத்திரங்கள்	0.29	0.28	98
3016	வானொலி செய்தித் தொடர்புசாதனங்கள்	4.83	04.83	100
3017	பங்களாக்களில் உள்ள துணிகளை சுத்தம் செய்வதற்கான செலவுகள்	3.00	02.46	82
3018	சட்டத்தரணிகளுக்கான கட்டணங்கள்	0.47	00.47	100
3019	நானாவித செலவுகள்	82.23	82.22	100
3021	மருத்துவ விநியோகங்கள்	25.33	25.31	100
3022	தேசிய பூங்காக்களின் அலுவலக செலவுகள்	18.96	18.95	100
3023	ஊழியர்களுக்கான வைத்தியசாலை மற்றும் மருத்துவ கட்டணங்கள்	0.15	00.14	96
3024	ஊழியர்களின் உயிர் இழப்பு மற்றும் உடலியல் பாதிப்புகள் என்பவற்றுக்கான	3.70	03.69	100

	நஷ்டஈடுகள்			
3030	சுற்றுலா இல்லங்களினதும் மற்றும் பூங்காக்களினதும் பராமரிப்பு	18.55	18.53	100
3034	வெளிநாட்டுப் பயிற்சிகள்	8.53	08.53	100
3036	ஊக்குவிப்பு கொடுப்பனவுகள்	118.91	118.91	100
3037	நியம மாநாடுகள்	6.28	06.26	100
3045	பராமரிப்பு சேவை அறைக்கு தேவையான உபகரணங்கள்	00.00	-	0
3046	பராமரிப்பு சேவை உணவுக் கொடுப்பனவுகள்	48.43	48.42	100
3048	பராமரிப்புக்கு தேவையான உபகரணங்கள்	0.86	0.86	100
3051	கல்வி மற்றும் கருத் திட்ட விடயங்கள்	2.02	2.01	100
3055	உள்நாட்டுப் பயிற்சிகள்	17.23	17.23	100
	மொத்தம்	**2,099.72**	**2,098.89**	**99.96**

2.2.3 மூலதன செலவினம் பற்றிய சுருக்க விபரம்

தொடர் இலக்கம்	விபரம்	மதிப்பீடு (ரூ.) மில்லியன்	செலவு (ரூ) மில்லியன்	நிதி முன்னேற்றம் (%)
3015	அரிதாகி வருகின்ற வனசீவராசிகளை பாதுகாப்பதற்கான செலவுகள்	17.46	17.46	100
3020	இயந்திர உபகரணங்கள், கட்டிடங்கள் முதலியவற்றின் பராமரிப்பு	70.9	70.89	100
3028	பூங்காக்களில் சுற்றுலா பயணிகளினதும் விலங்குகளினதும் வசதிகள் மேம்பாடு	61.87	61.86	100
3029	வாகனங்கள் / இயந்திர உபகரணங்கள் / படகுகள் என்பவற்றின் கொள்வனவு	22.76	22.76	100
3039	தலைமை அலுவலகத்தின் பிரிவுகளினது வசதிகள் மேம்பாடு	0.71	0.7	100
3040	விலங்குத்தொகை குறைப்பு	6.95	6.93	100
3041	கடல் வாழ் சீவராசிகள் பாதுகாப்பு	6.76	6.76	100
3042	வாழ்விடங்களை செறிவூட்டும் நடவடிக்கைகள்	57.63	57.62	100
3044	மின்சார வேலிகளின் பராமரிப்பு	117.13	117.12	100
3049	மின்சார வேலிகளின் நிர்மாணம்	200.75	200.75	100
3050	அலுவலக உபகரணங்கள்	12.05	12.04	100
	மொத்தம்	**574.97**	**574.89**	**100**

2.3 திரட்டு நிதியத்தினதும் மற்றும் வனசீவராசிகள் பாதுகாப்பு நிதியத்தினதும் கீழ் செயற்படுத்திய அபிவிருத்திப் பணிகள் முன்னேற்ற விபரம்

நிகழ்ச்சித் திட்டம்	பிரதான செயலாற்றுகை சுட்டி	அலகு	2023 ஆம் ஆண்டு வெளியீடு	
			திரட்டு நிதியம்	வனசீவராசிகள் பாதுகாப்பு நிதியம்
வாழ்விடங்கள் போஷித்தல்	நிறுவப்பட்ட விளம்பரப் பலகைகள் மற்றும் பழுதுபார்க்கப்பட்ட விளம்பரப் பலகைகள்	எண்ணிக்கை	114	13
	தேசிய பூங்காக்களின் அளவைப் பணி (உத்தேச கலாவெவ தே.பூ. 72 கிமீ, சோமாவத்தி 11.32 கிமீ)	கி.மீ.	11.32	72
	நீர் மூலங்கள் மறுசீரமைப்பு - தப்போவ திகலிய குளம் -குமன - பளுகொட்டவெல/அலியாவெல -திவ்லான வில்லுவ (நீர் பள்ளத்தாக்கு) - யால -3 பஸ்கெம குளம்	எண்ணிக்கை	-	05
	ஆக்கிரமித்து வளரும் தாவரங்களை அகற்றல் -தப்போவ /புந்தள/உடவளவ -தப்போவ – ஹோர்ட்டென் தென்ன	ஹெக்டேயர்	46.52	21.66
	வீதியின் இரு ஓரங்களிலும் வளர்ந்துள்ள கீழ் தாவரங்களை அகற்றல் - குமன/வஸ்கமுவ/யால -1 -குமன/வில்பத்து/மாதுருஓயா லாஹுகல/வஸ்கமுவ/ கவுதுல்ல மின்னேரியா உடவளவ	ஹெக்டேயர்	446	102.9
	புல் நிலங்கள் முகாமைத்துவம் குமன/வில்பத்து/மாதுருஓயா லாஹுகல/வஸ்கமுவ/மின்னேரியா	ஹெக்டேயர்	258.27	30
கட்டிடங்கள் நிர்மாணம் மற்றும் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு	பழுதுபார்க்கப்பட்ட அலுவலக மற்றும் நிருவாக கட்டிடங்கள்	எண்ணிக்கை	03	22
	பழுதுபார்க்கப்பட்டு வருகின்ற நிருவாக கட்டிடங்கள்	எண்ணிக்கை	-	15
	பழுதுபார்க்கப்பட்ட காவலரண் அலுவலகங்கள்	எண்ணிக்கை	-	02
	பழுதுபார்க்கப்பட்ட சுற்றுலா இல்லங்கள்	எண்ணிக்கை	-	11
	பழுதுபார்க்கப்பட்ட உத்தியோகபூர்வ இல்லங்கள்	எண்ணிக்கை	05	05
	தாபிக்கப்பட்ட மின்சார விநியோகங்கள் மற்றும் PABX மின்சார வலையமைப்பு முறைமை	எண்ணிக்கை	-	03
	மின்சார மற்றும் நீர் முறைமைகளின் பராமரிப்பு பணிகள் (கொக்மொட்டே சுற்றுலா பங்களா, ரிட்டிகல பயிற்சி நிலையம், கல்கே நுவையில், வில்பத்து தேசிய பூங்கா, அம்பாறை உதவிப் பணிப்பாளர் அலுவலகம்)	எண்ணிக்கை	-	05
	CCTV முறைமையின் பராமரிப்பு பணிகள் (தலைமை அலுவலகம்)	எண்ணிக்கை	-	01
	துப்புரவேற்பாட்டு வசதிகள் மேம்படுத்தப்பட்ட அலுவலகங்கள்	எண்ணிக்கை	01	10

	துப்புரவேற்பாட்டு வசதிகள் மேம்படுத்தப்பட்ட சுற்றுலா இல்லங்கள்	எண்ணிக்கை	01	01
வீதிகள் பழுதுபார்ப்பு	பழுதுபார்க்கப்பட்ட வீதிகளின் தூரம் (வில்பத்து தே.பு./வராஹேன பஸ்கெம)	கி.மீ.	13	03
	பழுதுபார்க்கப்பட்ட நடை பாலங்கள்	எண்ணிக்கை	-	02
பாதுகாப்பு ஒதுக்கப் பிரதேசங்களின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி	நீர் மூளங்கள் மறுசீரமைப்பு மற்றும் புதிய நிர்மாணங்கள் (வில்பத்து, தப்போவ, யால, மாதுருஓயா, கிரிதல, திம்பிரியமங்கட)	எண்ணிக்கை	-	02
	மழைநீர் சேமிப்பு டாங்கிகள் மற்றும் நீர் விநியோக வசதிகள் (பனிஜ்ஜாஓயா, கல்கொட்டு கந்த, தும்முல்ல, கிரிதல, ஹிக்கடுவ)	எண்ணிக்கை	04	02
	குழாய்க்கிணறுகள் நிர்மாணம் (கறுவெலகஸ்வெவ)	எண்ணிக்கை	01	-
	மேம்படுத்தப்பட்ட மின்சார விநியோக முறைமைகள் (ரிட்டிகல, மெனிக்சொரவ்வ, திம்பிரியமங்கட, உடவளவை, கிரிதலே, ஹிக்கடுவ)	எண்ணிக்கை	-	07
வாகனங்கள், இயந்திர உபகரணங்கள் மற்றும் படகுகள் என்பவற்றின் கொள்வனவு	கள அலுவலகங்களுக்கு துப்பாக்கிகளை அடுக்கி வைப்பதற்கான அலுமாரிகளின் கொள்வனவு	எண்ணிக்கை	-	15
	குளிரூட்டிகள் விநியோகம் - பழைய துறைமுக சுற்றுலா இல்லம்	எண்ணிக்கை	-	01
	கணனி சர்வர் இயந்திரத்திற்குத் தேவையான பாகங்கள் விநியோகம் - தலைமை அலுவலகம்	எண்ணிக்கை	-	01
	கள அலுவலகங்களிலும் மற்றும் பங்களாக்களிலும் பராமரிப்புப் பணிகளுக்குத் தேவையான மின் உபகரணங்கள், ரேடியோ தகவல் தொடர்பு முறைமை பராமரிப்பு உபகரணங்கள் விநியோகம்	உதிரிப் பாகப் பொதிகளின் எண்ணிக்கை	-	03
கடல் வாழ் சீவராசிகள் பாதுகாப்பு	பொது கண்காட்சி மாதிரிகள் தயாரித்தல் (குறுகிய ஃபின்ட் பைலட் திமிங்கலத்தின் மாதிரி - கல்பிட்டி தள பாதுகாப்பு அலுவலகம்)	எண்ணிக்கை	-	1
	கடல் பாதுகாப்பில் ஏற்படும் மோதல் முகாமைத்துவத்திற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துதல் - தெற்கு, திருகோணமலை, வவுனியா பிராந்தியம்	எண்ணிக்கை	-	7
	திணைக்களத்தின் 28 அதிகாரிகளுக்கு நீச்சல் மற்றும் உயிர்காக்கும் பயிற்சி	எண்ணிக்கை	-	1
	தொடங்கொட ஆமைகள் பாதுகாப்பு நிலையத்தில் உள்ள துரா இல்ல கட்டிடத்தை பழுது பார்த்தல் மற்றும் மீள அமைத்தல்	எண்ணிக்கை	-	1
	OCPP உடன் "கடல் பாதுகாப்பு ஒதுக்கப் பகுதியின் சிறந்த நடைமுறைகள்" பற்றிய வேலையரங்கு	எண்ணிக்கை	-	1
	தொடங்கொட ஆமைகள் பாதுகாப்பு நிலையத்தின்	எண்ணிக்கை	-	1

	கொள்கலன் அலுவலகத்தை பழுதுபார்த்தல் மற்றும் நவீனப்படுத்துதல்			
	ஹிக்கடுவ தேசிய பூங்காவில் மிதவை வசதிகளை மீண்டும் நிலைநிறுத்துதல்	எண்ணிக்கை	-	1
	தென் வலயம் - ஆமை வளர்ப்பு அலகு நிர்மாணம்	எண்ணிக்கை	-	1
	தற்காலிக ஆமை வளர்ப்பு அலகு நிர்மாணம் - மேற்கு வலயம்	எண்ணிக்கை	-	1
	வேவ் ரைடர் கப்பலுக்கான சேவை	எண்ணிக்கை	-	1
அரிதாகி வருகின்ற வனசீவராசிகளின் பாதுகாப்பு	எக்ஸ்ரே இயந்திரத்திற்கான பாதுகாப்பு ஆடைப் பொதிகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு	எண்ணிக்கை	-	2
	அறுவை சிகிச்சை கருவிகள் மற்றும் பிரேத பரிசோதனை கருவிகள் ஆகியவற்றை தொகையாக கொள்வனவு செய்தல்	எண்ணிக்கை	-	9
	குரங்குகள் பெருவதை கட்டுப்படுத்துவதற்கான கருத்தடை திட்டங்கள்	எண்ணிக்கை	-	2
	ஆக்ஸிஜன் விநியோகம் மற்றும் துணை முறைமைகளின் கொள்வனவு	எண்ணிக்கை	-	2
	பராமரிப்பு உபகரணங்கள் கொ்ளவனவு (உபகரண கருவிகள்)	எண்ணிக்கை	-	1
	கூண்டுகளின் கூரைகளை அமைத்தல்	எண்ணிக்கை	-	2
	இடம்பெயர்ந்த மற்றும் காயமடைந்த சிறிய விலங்குகளைப் பிடிக்க தானியங்கி பொறிகளைத் தயாரித்தல்	எண்ணிக்கை	-	58
	03 வெப்ப கதிர் விளக்குகள் கொள்வனவு - அத்திடிய வனவிலங்கு தடுப்பு நிலையம்	எண்ணிக்கை	-	03
	அல்ட்ராசவுண்ட் ஸ்கேன் இயந்திரம் கொள்வனவு	எண்ணிக்கை	-	01
	மயக்க மருந்து கருவி கொள்வனவு	எண்ணிக்கை	-	01
	மருந்துகளை களஞ்சியப்படுத்துவதற்கான குளிர்சாதன பெட்டிகள் கொள்வனவு - அத்திடிய வனவிலங்கு தடுப்பு நிலையம்	எண்ணிக்கை	-	01
	வன விலங்குகளை கொண்டு செல்வதற்கு 05 மரக் கூண்டுகள் தயாரித்தல் - பண்டௌலகம வனவிலங்கு சுகாதார முகாமைத்துவ நிலையம்	எண்ணிக்கை	-	05
	மான் / மரை போன்ற விலங்குகளை எடுத்துச்செல்வதற்கு போக்குவரத்துக்கு ஏற்ற கூண்டுகளை அமைத்தல்	எண்ணிக்கை	-	06
	கன்னிக் கெமரா முறைமையைப் புதுப்பிக்கத் தேவையான பொருட்கள் (பற்றறி, பாதுகாப்பு அட்டை, மெமரி அட்டை)	எண்ணிக்கை	-	96
	புதிய திறந்தவெளி வனவிலங்கு புனர்வாழ்வுப் பிரிவு - யானைகள்	எண்ணிக்கை	-	01

	தங்குமிடம்			
	கூண்டுகளில் வசிக்கும் விலங்குகளின் கால்நடை உணவு அலகுக்கு தேவையான எரிவாயு சிலிண்டர் மற்றும் அடுப்பு ஆகியவற்றின் கொள்வனவு	எண்ணிக்கை	-	02
அலுவலக உபகரணங்கள் கொள்வனவு	கணனி இயந்திரங்கள்	எண்ணிக்கை	-	10
	UPS	எண்ணிக்கை	-	30
	மடி கணனி	எண்ணிக்கை	-	03
	அச்சீட்டு இயந்திரங்கள்	எண்ணிக்கை	-	10
	கடினத்தட்டுக்கள்	எண்ணிக்கை	-	05
	காசு எண்ணியிந்திரங்கள்	எண்ணிக்கை	-	05
	பெட்டிவடிவ மின்விசிறி	எண்ணிக்கை	-	03
	தொலைக்காட்சிப்பெட்டி	எண்ணிக்கை	-	01
	கிரிதலே வனவிலங்கு பயிற்சி நிலையத்தின் கல்விக் கட்டிடத்திற்கான தளபாடங்கள் திட்டம்	எண்ணிக்கை	-	01
	தலைமை அலுவலக தகவல் தொடர்பு பிரிவுக்கான தளபாடங்கள் மற்றும் ஓட்டுநர் அறை மற்றும் உணவு விடுதிகள் ஆகியவற்றுக்கான உபகரணங்கள் கொள்வனவு	எண்ணிக்கை	-	23
விலங்குத்தொகை குறைப்பு	ஹொர்தொன்தன்ன தேசிய பூங்கா (ஓஹியா, பட்டிபொல) மற்றும் வஸ்கமுவ தேசிய பூங்கா தொடர்பான விலங்குகள் கட்டுப்பாட்டுத் திட்டங்கள்	எண்ணிக்கை	-	3
	சிவனொலிபாத மலை மற்றும் யால தேசிய பூங்காவின் வலய இலக்கம் (02) இல் சிரமதான நிகழ்ச்சித் திட்டங்கள்	எண்ணிக்கை	-	8
	புத்தளம் வனவிலங்கு வலயத்தில் உள்ள தேவையுடைய பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்குதல்	எண்ணிக்கை	-	50
	ஜப்பானிய ஜபரா மைய கைவினை பற்றிய வேலையரங்கள்	எண்ணிக்கை	-	03
	யானை மனித மோதல்களை சமாளிக்கும் பொருட்டு திக்கோட்டைக்கும் மற்றும் பில்லுமலைக்கும் சூரிய மின் விளக்குகளை வழங்குதல்	எண்ணிக்கை	-	30

2.3.1 மின்சார வேலிகளை அமைத்தல்

2023.12.31 ஆம் திகதிற்கான முன்னேற்றம் பற்றிய விபரம்

வனசீவராசிகள் வலயம்	மாவட்டம்	மின்சார வேலியின் பெயர்	மின்சார வேலியின் நீளம் (கி.மீ.)	நிர்மாணித்து நிறைவு செய்யப்பட்டுள்ள மின்சார வேலிகளின் நீளம் (கி.மி.)	இது வரை செலுத்தப் பட்டுள்ள தொகை (மில்லியன் ரூபா)
கிழக்கு	மட்டக்களப்பு	தொனித்தமடு	3	3	0.72
		ஊத்துச்சேனி	5	5	1.29
		பெரியவெளி ஈச்சையடி	2	2	0.60
		பெரியவெளி 6 ஆம் மைல் கணு	1	1	0.35
		பெரியவெளி மடுப்பிட்டித் தோட்டம்	1	1	0.33
		கோராவலி வட்டுவான்	1	1	0.33
		உன்னச்சிச்சி மதுரவாச்சி	1	1	0.31
		பூநகரி மேற்கு சலபச்சேனி	2	2	0.63
		பூநகரி கிழக்கு சிங்கப்புர	5	5	1.28
	அம்பாறை	கழுகல்ஓயா	18.4	18.4	6.50
		கிவுலேவத்த	5	5	1.44
மத்திய	கண்டி	விக்டோரியா வேகல	11	11	2.43
		கடன்ஹேன நவதில்லிவெடியாவ	11	11	2.65
	பதுளை	அரலுபிட்டிய தெஹிகம	13.5	10.4	1.30
திருகோணமலை	திருகோணமலை	மதவாச்சி பக்மீகஹவெவ	16	13.8	1.36
		நா உல்பத்த	2.7	2.5	0.26
		மைலவெவ	3.5	4.1	0.43
		ரங்கிரி உல்பத்த	1.8	1.8	0.20
		தல்கஸ்வெவ	2.5	2.5	0.30
		மொரகம	2	2	0.22
		ஒட்டச்சிக்குளம்	2	1.6	0.22
		எத்தாபெந்திவெவ	8.1	8.1	1.64
		கித்துல் உத்துவ கிராமத்தை சுற்றி	6.5	4.6	0.47
அனுராதபுரம்	அனுராதபுரம்	கிரல்பெட்டியாவ - ஒயாமடு	15	15	3.18
		கிவுலேகட - வன்னம்குளம்	104	6	2.02
		நல்லமுதாவ - சங்கட்டவெவ	16	12	5.46
		வேலகன்உல்பத்த கிவுலேகட	61	20	9.36
வவுனியா	வவுனியா	நீலியாமோட்டே	6.5	6.5	1.45
		சேமமடு	9.2	9.148	0.60
அனுராதபுரம்	அனுராதபுரம்	அருணகம - தங்கொல்ல	23	9	2.37
		கிரேவல்கந்த	7.5	5.351	1.35
		கல்குளம் பலயாவெவ	14.5	9.6	2.67
வவுனியா	வவுனியா	நீலியாமோட்டே	6.5	6.5	1.45
		சேமடு	9.2	9.148	0.60
	அனுராதபுரம்	அருணகம - தங்கொல்ல	23	9	2.37
		கிரேவல்கந்த	7.5	5.351	1.35

		கல்குளம் பலயாவெவ	14.5	9.6	2.67
தெற்கு	இரத்தினபுரி	ஹந்தகிரிய ஹெம்பிலியபான கபொல்ல வரை	5	4.1	1.22
	அம்பாந்தோட்டை	கொஹலங்கலவிலிருந்து சீனுக்கல் வரையான புதிய தொங்கு மின்சார வேலி	6	3	0.85
ஊவா	மொனராகலை	5 ஆம் மைல் கணு முதல் 7 ஆம் மைல் கணு வரையான முதலாவது மின்சார வேலி	5	5	0.70
		முல்லேகம தும்பந்துராவ	18	11.4	1.46
குருநாகல்	குருநாகல்	மீ ஓயா - பயிரிக்குளம்	16	5.5	0.55
மொத்தம்				**239.399**	**58.64**

2.3.2 யானை மனித மோதல்களைக் குறைத்தல்

வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் தற்போது 5390 கிலோமீற்றர் நீளமான மின்சார வேலியை பராமரித்து வருகின்றது. அதன் பராமரிப்புக்காக 3270 சிவில் காவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் மற்றும் காட்டு யானைகளை விரட்ட 672 சிவில்

விடயம்	பிரதான செயலாற்றுகை சுட்டி	அலகு	2023 ஆம் ஆண்டு வெளியீடு	
			திரட்டு நிதியம்	**வனசீவராசிகள் பாதுகாப்பு நிதியம்**
யானை மனித மோதல்களைக் குறைத்தல்	மின்சார வேலிகளின் நிர்மாணம்	கி.மீ.	-	239.4
	மின்சார வேலிகளுக்கான உபகரணங்கள் கொள்வனவு	Rj tPjk; %	100	-
	மின்சார வேலிகளுக்காக பாதுகாப்பு கூடாரங்களின் நிர்மாணம்	எண்ணிக்கை		9
	கொள்வனவு செய்த யானை வெடிகளின் எண்ணிக்கை	எண்ணிக்கை		1,483,684

பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

2023 ஆம் ஆண்டில், காட்டு யானை-மனித மோதலைக் குறைக்கும் பொருட்டு காட்டு யானை அச்சுறுத்தல் உள்ள பகுதிகளில் யானை வெடிகள் கொள்வனவு செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டன.

யானை வெடி வகை	**எண்ணிக்கை**	**செலவு (மில்லியன் ரூபா)**
வெடி (பெரியது)	342,500	71.92
வெடி (சிறியது)	749,434	142.39
ஒளிரும் சுருள்வெடி	391,750	103.81
மொத்தம்	**1,483,684**	**318.13**

2023 ஆம் ஆண்டு யானை வெடிகள் பகிர்ந்தளிப்பு பற்றிய விபரம்				
வனசீவராசி வலயம்	**எண்ணிக்கை**			
	அதிரும் வெடி (பெரியது)	**அதிரும் வெடி (சிறியது)**	**ஒளிரும் வெடி**	**மொத்தம்**
பொலன்னறுவை	34,460	97,905	50,495	182,860
அனுராதபுரம்	54,640	81,965	52,585	189,190
வடமேற்கு	39,240	86,475	45,284	170,999
கிழக்கு	43,235	100,428	56,925	200,588
தெற்கு	38,620	74,956	40,170	153,746
மத்திய	33,600	55,415	32,011	121,026

ஊவா	29,340	67,495	26,010	122,845
புத்தளம்	20,975	71,335	30,540	122,850
வவுனியா	13,945	22,020	15,750	51,715
திருகோணமலை	23,965	73,485	33,300	130,750
கிளிநொச்சி	10,480	17,955	8,680	37,115
மொத்தம்	**342,500**	**749,434**	**391,750**	**1,483,684**

2.3.3 காட்டு யானைகளினால் ஏற்படும் சேதங்களுக்கான நஷ்டஈட்டுக் கொடுப்பனவுகள்

நாடளாவிய ரீதியில் காட்டு யானை தாக்குதலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாவட்ட செயலாளர்கள் ஊடாக காட்டு யானை சேதத்திற்கான நட்டஈடு வழங்கப்பட்டு வருகின்றது. 2023.21.31 ஆம் திகதிற்கு வழங்கப்பட்ட நஷ்டஈட்டுத் தொகை பற்றிய விபரம் பின்வருமாறு.

மாவட்ட நஷ்டஈட்டுக் கொடுப்பனவு குழுக்களின் முன்னேற்றம் (2023.12.31 ஆம் திகதிற்கு)

மாவட்டம்	மரணம்		உடல் பாதிப்பு		சொத்துக்கள் சேதம்		நஷ்டஈடு நிமித்தம் செலுத்தப் பட்டுள்ள மொத்தத் தொகை (மில்லியன் ரூபா)
	நஷ்டஈடு வழங்கப் பட்டுள்ள சம்பவங்களின் எண்ணிக்கை	செலுத்தப்பட்ட தொகை (மில்லியன் ரூபா)	நஷ்டஈடு வழங்கப் பட்டுள்ள சம்பவங்களின் எண்ணிக்கை	செலுத்தப்பட்ட தொகை (மில்லியன் ரூபா)	நஷ்டஈடு வழங்கப் பட்டுள்ள சம்பவங்களின் எண்ணிக்கை	செலுத்தப்பட்ட தொகை (மில்லியன் ரூபா)	
அனுராதபுரம்	43	36.10	60	6.65	716	35.40	78.15
பொலன்னறுவை	29	17.70	19	1.88	730	40.48	60.07
மாத்தளை	9	2.79	12	0.77	43	3.53	7.08
குருநாகல்	15	13.10	28	4.13	285	11.27	28.50
கண்டி	0	0.00	3	0.25	100	4.47	4.71
திருகோணமலை	11	11.30	11	1.68	176	10.20	23.19
மட்டக்களப்பு	15	21.50	44	4.35	230	14.50	40.35
அம்பாறை	22	23.30	25	1.65	612	35.93	60.84
அம்பாந்தோட்டை	13	9.10	13	1.01	86	3.25	13.36
மொனராகலை	10	5.00	6	0.39	84	5.13	10.49
புத்தளம்	7	6.00	10	0.21	79	4.62	10.82
கிளிநொச்சி	0	0.00	0	0	0	-	0.00
முல்லைத்தீவு	0	0	0	0.00	4	0.24	0.24
வவுனியா	0	0.00	1	0.06	9	1.00	1.06
மாத்தறை	2	2.00	0	0.00	0	-	2.00
நுவரெலியா	0	0.00	0	0	0	-	0.00
இரத்தினபுரி	1	1.00	0	0.00	3	0.05	1.05
மன்னார்	1	1.00	3	0.16	5	0.19	1.36
களுத்துறை	1	1.00	0	0.00	0	-	1.00
பதுளை	6	3.60	4	0.15	267	16.99	20.74
மொத்தம்	**185**	**154.49**	**239**	**23.34**	**3429**	**187.25**	**365.01**

க.வே. கடந்த வருடத்துடன் தொடர்புடைய மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்ட நஷ்டஈட்டுக் குழுக்களால் அங்கீகரிக்கப்பட்ட நஷ்டஈட்டு விண்ணப்பங்களுக்கான கொடுப்பனவுகள் இந்த வருடம் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் முதலை தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்த இருவருக்கு மாத்தறை மாவட்ட நஷ்டஈட்டுக் குழு நஷ்டஈட்டை வழங்கியுள்ளது.

2.3.4 அரிதாகி வரும் ஆபத்துக்குள்ளாகிய விலங்குகள் மற்றும் தாவரங்களின் சர்வதேச வர்த்தகத்திற்கான சர்வதேச மாநாட்டின் கீழும் மற்றும் விலங்கினங்கள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு சட்டத்தின் கீழும் அனுமதிப் பத்திரங்களை வழங்குதல்

அரிதாகி வரும் ஆபத்துக்குள்ளாகிய விலங்குகள் மற்றும் தாவரங்களின் சர்வதேச வர்த்தகத்திற்கான சர்வதேச மாநாட்டின் (CITES -The Convention on International Trade in Endangered Species of Wild Fauna and Flora) கீழ் 1322 அனுமதிப் பத்திரங்களும் விலங்கினங்கள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு சட்டத்தின் (Fauna and Flora Protection Ordinance) கீழ் 143 அனுமதிப் பத்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன. அதன் மூலம் மொத்தம் 2.30 மில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

2.3.5 சட்ட அமுலாக்கல் கள உத்தியோகத்தர்களுக்கு மிகையூதியங்களை வழங்குதல்

வனவிலங்குகளுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக 2023 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் அதிகாரிகள் நடத்திய சோதனையின் பின்னர் 2053 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. சோதனை நடவடிக்கைகளுக்கு பங்களித்த உத்தியோகத்தர்களுக்கு மிகையூதியமாக வனவிலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு கட்டளை சட்டத்தின் கீழ் சட்டத்தை அமுலாக்கி அபராதமாக அறவிடப்பட்டு வனவிலங்கு பாதுகாப்பு நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்த 91.6 மில்லியன் ரூபா வருமானத்தில் இருந்து 25.2 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

2.3.6 2023.12.31 ஆம் திகதிற்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை பற்றிய விபரங்கள்

தேசிய பூங்காக்கள்	சுற்றுலாப் பயணிகளின் வருகை		
	உள்நாட்டு	வெளிநாட்டு	மொத்தம்
யால	251,865	214,572	466,437
ஹோர்ட்டன்தென்ன சமவெளி	214,756	30,950	245,706
உடவளவை	98,561	89,827	188,388
வஸ்கமுவ	9,014	1,347	10,361
மின்னேரியா	40,894	21,170	62,064
புந்தள	5,587	4,131	9,718
ஹொரகொல்ல	11,011	19	11,030
கவுதுல்ல	45,564	49,059	94,623
கல் ஓயா	9,538	4,281	13,819
குமண	21,263	7,267	28,530
அங்கமெடில்ல	1,031	2	1,033
கெல்வெஸ்லேன்ட்	14,850	341	15,191
வில்பத்து	49,113	24,970	74,083

மாதுரு ஓயா	1,624	315	1,939
லாஹுகல	437	40	477
புறாத்தீவு	53,992	9,384	63,376
ஹிக்கடுவ	31,062	1,385	32,447
உடவளவை யானை இல்லம்	112,080	61,596	173,676
கலாவெவ	766	121	887
மிரிஸ்ஸ	16,059	60,900	76,959
வெலிபற சரணாலயம்	8,135	1,922	10,057
கிரித்தலே	8,610	104	8,714
மொத்தம்	**1,005,817**	**583,703**	**1,589,520**

2.3.7 2023.l2.3l ஆம் திகதிற்கு சுற்றுலா வருமானம் பற்றிய விபரங்கள்

தேசிய பூங்காக்கள்	**வருமானம் (மில்லியன் ரூபா)**
யால	2,503.53
ஹோர்ட்டன்தென்ன சமவெளி	403.24
உடவளவை	997.21
வஸ்கமுவ	14.57
மின்னேரியா	228.82
புந்தள	25.87
ஹொரகொல்ல	00.53
கவுதுல்ல	519.43
கல் ஓயா	27.69
குமண	51.10
அங்கமெடில்ல	00.64
கெல்வெஸ்லேன்ட்	02.43
வில்பத்து	302.28
மாதுரு ஓயா	02.22
லாஹுகல	01.31
புறாத்தீவு	132.79
ஹிக்கடுவ	09.25
உடவளவை யானை இல்லம்	120.71
கலாவெவ	00.55
மிரிஸ்ஸ	372.10
வெலிபற சரணாலயம்	05.96
கிரித்தலே	00.47
மொத்தம்	**5,723.34**

2.4 2023 ஆம் ஆண்டில் திணைக்களம் வழங்கிய விஷேட சேவைகள்

- **சதுப்புநில தினத்திற்கான பொது விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல்**
  இது சதுப்பு நிலங்களை மறுசீரமைப்புக்கான நேரம் ("It's time for wetland restoration") என்பது இந்த ஆண்டு சதுப்புநில தினத்தின் தொணிப்பொருளாக இருந்தது. இந்தத் தொணிப்பொருளின் கீழ் ஒரு புகைப்படப் போட்டியும் மற்றும் சதுப்பு நிலத்திற்கு ஒரு நிமிடம் என்ற தொனிப்பொருளில் ஒரு காணொளி போட்டியும் நடத்தப்பட்டுள்ளன. இந்த வீடியோ போட்டி பாடசாலை, பல்கலைக்கழகம் மற்றும் திறந்த என மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு நடத்தப்பட்டது. பத்து வாரங்களாக விஜயா நாளிதழின் ஊடாக குறுக்கெழுத்துப் போட்டியும் நடத்தப்பட்டது. நடத்தப்பட்ட இந்தப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும் மற்றும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன. மேலும் சதுப்புநிலங்கள் பற்றிய விழிப்புணர்வு உள்ளடங்கிய தேசிய வைபவமும் பெப்ருவரி மாதம் இரண்டாம் திகதி சுற்றாடல் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்டது.
- **உலக வனவிலங்கு தினத்திற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல்**
  வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் தலைமையில் வவுனியா பல்கலைக்கழகத்தின் ஒத்துழைப்புடன் மன்னார் வான்கலை சரணாலயத்தில் 2023 உலக வனவிலங்கு தின வைபவம் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப் பட்டது. மேலும் வனவிலங்கு தினத்தை முன்னிட்டு, பல்கலைக்கழக மாணவர்களின் ஆதரவுடன் பாடசாலை மாணவர்களுக்கான ஒரு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டமும் நடத்தப்பட்டது. அத்துடன் வனவிலங்கு தின விழாவின் போது திறமையை வெளிப்படுத்திய பாடசாலை மாணவர்களின் ஆதரவுடன் ஒரு நிகழ்ச்சித் திட்டமும் நடத்தப்பட்டது. வனவிலங்கு தின வைபவத்தின் போது திறமையை வெளிப்படுத்திய பாடசாலை மாணவர்கள் மதிக்கப்பட்டு பாராட்டப்பட்டனர். "வனவிலங்கு பாதுகாப்பு பங்காளித்துவம்" என்ற ஒரு தொணிப்பொருளின் கீழ் வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களத்தால் இளைஞர்களுக்கான ஒரு பயிலுநர் புகைப்படப் போட்டியும் நடத்தப்பட்டுள்ளது.

- **காட்டு யானை மனித மோதலை தவிர்க்க கிராமிய மக்களுக்கு போதிக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள்**
  மனித-காட்டு யானை மோதலை குறைக்கும் பொருட்டு பிரதேச செயலாளர்கள், கிராமிய மக்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் ஆகியோர் இணைந்து காட்டுயானை மோதல்கள் அதிகம் இடம்பெறுகின்ற இடங்களில் மின்சார வேலிகளை அமைத்தல், மின்சார வேலிகளைப் பராமரித்தல், காட்டு யானைகள் தங்கும் இடங்களை கண்டறிந்து அத்தகைய இடங்களில் உள்ள காடுகளை அகற்றி இருள் உள்ள இடங்களில் மின் விளக்குகளைப் பொருத்துதல் போன்ற வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

- **திணைக்களம் சமர்ப்பித்த இலங்கையில் காட்டு யானைகளின் DNA பகுப்பாய்வு தொடர்பான இரண்டாவது ஆராய்ச்சிப் பத்திரம்**
  வனவிலங்குப் பாதுகாப்புத் பாதுகாப்புத் திணைக்களமும் பேராதனைப் பல்கலைக்கழகமும் இணைந்து நடத்திய காட்டு யானைகளின் DNA பகுப்பாய்வு 2023.06.13 ஆம் திகதி PLOS ONE என்ற சர்வதேச ஆராய்ச்சி இதழில் மதிப்பீடப்பட்டுள்ளது. அந்த ஆராய்ச்சியின் மூலம் இலங்கை யானைகளின் மைட்டோகாண்ட்ரியல் மரபணு (Elephas maximus maximus) முதன்முறையாக தயாரிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் வாழும் இந்த உப யானை இனம் மியான்மரில் வாழ்ந்த யானைகளில் இருந்து சுமார் 0.2 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு பிரிந்தமை உறுதிசெய்யப்பட்டுள்ளது. மேலும், இலங்கையில் யானைகளின் எண்ணிக்கை எவ்வாறு மூன்று முக்கிய புவியியல் பகுதிகளின் கீழ் பிரிக்கப்பட்டுள்ளது என்பதும் விளக்கப்பட்டுள்ளது.

- **கரும்புலியின் கருப்பு தோல் நிறத்திற்கான மரபணுக் காரணம் பற்றிய ஆராய்ச்சிப் பத்திர வெளியீடு - இலங்கை கரும்புலியின் (*Panthera pardus kotiya*) உயிர் புவியியல் மற்றும் பரிணாமம் பற்றிய ஆராய்ச்சிப் பத்திரம்**
  இலங்கையில் உள்ள புலி (Panthera pardus kotiya) அழிந்து வருகின்ற ஒரு உப இனமாகும். இந்த இனத்தை சேர்ந்த புலிகள் இலங்கையில் தனியாக ஆங்காங்கே வாழுகின்றன. இந்தப் புலிகளில், மெலனிஸ்டிக் அல்லது கரும்புலிகள் பல சந்தர்ப்பங்களில் பதிவாகியுள்ளன. இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளில் பிலாலா குடும்பத்தை சேர்ந்த கருப்பு நிற வடிவத்தின் பரிணாம வளர்ச்சி அடைந்துள்ள புலிகளைக் கருத்தில் கொள்ளும் போது மூன்று இனங்கள் பல சந்தர்ப்பங்களில் வெவ்வேறு பிறழ்வுகளைக் கொண்டுள்ளன என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இலங்கையில் உள்ள கரும்புலிகள் அடங்கலாக எஞ்சிய உயிரினங்களின் பிறழ்வுகள் அல்லது பிற மாற்றங்கள் குறித்து முறையான ஆராய்ச்சி எதுவும் இதுவரை நடத்தப்படவில்லை. ஆகையினால்,

வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்களம், பேராதெனியப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து, கரும்புலியின் DNA மாதிரிகளின் செயலில் உள்ள மெலனிசத்தின் பிறழ்வு காரணமாக மெலனின் தொகுப்புக்கு முக்கிய நொதியத்திக்கான அணுக்கரு மரபணு குறியீட்டில் மாற்றம் ஏற்பட்டதா என்பதை ஆராய்ச்சி செய்தது. ASIP மரபணுவில் உள்ள ஒரு ஒற்றை அமினோ அமில மாற்றம் [(Single Nucleotide Polymprphism) ((C353A)] அவதானிக்கப்பட்டது. இந்த மாற்றத்தால் ASIP செயல்பாட்டில் முழுமையான இழப்பு ஏற்படுகின்றது என்பது தெரியவருகின்றது. இதன் விளைவாக கருப்பு நிறப் புலிகள் உருவாகின்றன. மேலும் அந்த விலங்குகள் 0.5 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கைப் புலி ஒரு உப இனமாக பிரிந்தமையையும் கரும்புலிகள் மீண்டும் மீண்டும் தோன்றுவதற்கான சாத்தியக்கூறுகள் காரணமாக இலங்கைப் புலிகளின் மரபணு வேறுபாடு மிகவும் குறைவாக இருப்பதையும் இந்தத் தரவு உறுதிப்படுத்தியது. இலங்கையில் கறுப்பு கறுப்பு நிறப் புலிகளும் எதிர்காலத்தில் பதிவாகலாம்.

- **உலக தாவர பட்டியலில் ஒரு புதிய தாவரத்தை சேர்க்கின்ற ஸ்ட்ரோபிலாந்தஸ் ஸ்ரீபாடென்சிஸி வெளியீடு**

  வண்ணத்துப்பூச்சி இனங்களின் ஒதுக்கப் பகுதியில் மட்டும் கண்டறியப்பட்டுள்ள இது வரை காலமும் பதிவாகாதிருந்த ஒரு தாமரை இனம் *Strobilanthes sripadensis* என்ற பெயரில் புதிய ஒரு தாமரை இனம் வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்களத்தில் பணிபுரியும் ஆராய்ச்சியாளர்களால் கண்டறியப்பட்டு Phytotaxa என்ற சர்வதேச ஆராய்ச்சி இதழில் ஒரு ஆராய்ச்சிப் பத்திரம் வெளியிடப்பட்டதன் மூலம் உலக தாரவப் பெயர் பட்டியலில் புதிய ஒரு பெயர் உள்ளீர்க்கப்பட்டது.

- **முகாமைத்துவத் திட்டங்களைத் தயாரித்தல்**

  வனவிலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு கட்டளை சட்டத்தின் (1964 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, 1970 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, 1993 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க மற்றும் 2009 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான) 2 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டஏற்பாடுகளுக்கு இணங்க வெடத்தல்த்தீவு இயற்கை வன ஒதுக்கப் பகுதிற்கான முகாமைத்துவத் திட்டம் தயாரிக்கப்பட்டது. இதை செயற்படுத்தும் காலம் 2024 - 2028.

- **2023 ஆம் ஆண்டில் புலிகளைப் பாதுகாப்பதற்கும், மனிதர்கள் மீதான புலிகளின் மறைமுக தாக்கத்தைக் குறைப்பதற்கும் பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்கள் திணைக்களத்தால் செயற்படுத்தப்பட்டன.**

  புலிகளுக்கும் மனிதர்களுக்கும் இடையில் பாதகமான பாதிப்புகள் அதிகரித்து வருகின்ற அம்பகமுவ பிரதேச செயலகப் பிரிவில் கிராம உத்தியோகத்தர்கள் அடங்கலாக அரச உத்தியோகத்தர்களுக்கான ஒரு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம்.

  அம்பகமுவ பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள தோட்டக் கம்பனிகளின் முகாமையாளர்களுக்கு புலி-மனித மோதலை குறைப்பதற்காக 04 விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் (எண்ணிக்கை 140).

  மக்களை விழிப்பூட்டுவதன் மூலம் புலிகளுக்கும் மனிதர்களுக்கும் இடையில் ஏற்படுகின்ற தாக்கங்களை குறைப்பதற்கும் குழவிகளாலும் மற்றும் பம்பரத் தேனீக்களாலும் ஏற்படும் பிரச்சினைகளை குறைப்பதற்கும் ஹக்கல வனப் பாதுகாப்பு அலுவலகத்தின் ஊடாக நடத்தப்பட்ட 08 விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள்.

  புலிகளைப் பாதுகாப்பதற்கும், புலிகளின் வாழ்விடங்களுக்கு அருகாமையில் வாழுகின்ற மக்கள் மீது புலிகளின் மறைமுக தாக்கத்தைக் குறைப்பதற்கும் பாதிப்புகள் அதிகரித்து வருகின்ற பகுதிகளில் 25 வனவிலங்கு அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட ஒரு செயன்முறைப் பயிற்சி.

WILDLANKA சர்வதேச ஆராய்ச்சி சஞ்சிகை தற்போது ஒரு வருடத்திற்கு 04 தொகுதிகளுடன் வெளியிடப்படுகிறது. 2023 ஆம் ஆண்டில், தரத்தில் உயர்ந்த பல உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆய்வுக் கட்டுரைகள் வெளியிடப்பட்டுள்ளன. அதன் பதிப்பாசிரியர் குழுவில் புகழ்பெற்ற உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழக பேராசிரியர்களும் விஞ்ஞானிகளும் உள்ளடங்குகின்றனர். இது திணைக்களம் சர்வதேச அங்கீகாரம் பெற பெரிதும் உதவியது.

WILDLANKA SYMPOSIUM சர்வதேச ஆராய்ச்சி கருத்தரங்கு 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 19, 20 ஆம் திகதிகளில் "வோர்ட்டர்ஸ் எட்ஜ்" ஹோட்டலில் "புதிய கண்டுபிடிப்புகளின் ஊடாக வனசீவராசிகள் பாதுகாப்பு" என்ற கருப்பொருளின் கீழ் பல ஆராய்ச்சியாளர்களின் பங்கேற்புடன் நடைபெற்றது.

வனசீவராசிகள் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள ஈரநிலங்களின் விபரங்கள் அடங்கிய “வனசீவராசிகள் ஈரநிலங்கள்’’ என்ற தலைப்பில் இரண்டு இதழ்கள் வெளியிடப்பட்டன.

வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் ப்ளூ கிரீன் மீடியா யூடியூப் செனலுக்காக 2023 ஆம் ஆண்டின் நிமித்தம் தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்

2023 ஜனவரி மாதம் 02 - ப்ளூ கிரீன் மீடியா ஹெரிடேஜ் செனலுக்காக தயாரிக்கப்பட்ட பாதுகாக்கப்பட்ட தாவரங்கள் பற்றிய குறுகிய வீடியோ நிகழ்ச்சித் தொடர் - ப்ளூ பினாரா பற்றிய நிகழ்ச்சித் திட்டங்கள்
2023 ஜனவரி மாதம் 18 - புளூ கிரீன் மீடியா ஆவணப்படமாக்கல் செனலுக்காக ஏற்பாடு செய்த சிரிலேக்கின் பவள சொர்க்கத்திற்கான பயணம் - புறா தீவு தேசிய பூங்கா பற்றிய ஆவணப்படமாக்கல் நிகழ்ச்சித் திட்டங்கள்
2023 பெப்ருவரி 09 - ப்ளூ கிரீன் மீடியா நடைமுறை விவகார செனலுக்காக ஏற்பாடுசெய்த உலக சதுப்புநில தினம் பற்றிய நிபுணர் கலந்துரையாடல் (பங்கேற்பு - வயம்ப கல்கலைக் கழகத்தின் பேராசிரியர் திருமதி செவ்வந்தி ஜெயக்கொடி, மத்திய சுற்றாடல் அதிகார சபையின் இயற்கை வள முகாமைத்துவப் பணிப்பாளர் திருமதி பிரியங்கனி குணதிலகா, வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் பாதுகாப்பு ஒதுக்கப் பகுதி முகாமைத்துவ பணிப்பாளர் திரு மஞ்சுள அமரரத்ன)
2023 மார்ச் மாதம் 01 - ப்ளூ கிரீன் மீடியா நடைமுறை விவகாரங்கள் செனலுக்காக ஏற்பாடு செய்த உலக கடல் புல் தின குழுக்கள் விவாதம் (பங்கேற்பு - வயம்ப கல்கலைக் கழகத்தின் பேராசிரியர் திருமதி செவ்வந்தி ஜெயக்கொடி, வெளிவிவகாரங்கள் அமைச்சின் கடல் சார் அலுவல்கள் சுற்றாடல் மற்றும் காலநிலை மாற்றப் பிரிவின் பணிப்பாளர் திரு ரிபாஃ வதூத், கடல் புல் நிபுணரும், IUCN உறுப்பினருமான திரு சுசந்த உடகெதர, வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பாதுகாப்பு ஒதுக்கப் பகுதி முகாமைத்துவப் பணிப்பாளர் திரு மஞ்சுள அமரரத்ன)
2023 மார்ச் மாதம் 21 - ப்ளூ கிரீன் மீடியா நடைமுறை விவகாரங்கள் செனலுக்காக ஏற்பாடு செய்த உலக வன தினம் பற்றிய நிபுணர் கலந்துரையாடல் (பங்கேற்பு - வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் சுற்றாடல் முகாமைத்துவ மற்றும் புவிப் பாதுகாப்புப் பிரிவு வனப் பாதுகாப்பு உத்தியோகத்தர் திரு பிரியந்த சேனாரத்ன, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திலக் சந்திரதிலக்க, சுற்றாடல் அமைச்சின் சுற்றாடல் கொள்கைகள் மற்றும் திட்டமிடல் பிரிவின் மேலதிக செயலாளர் திருமதி பத்மா அபேகோன்)
2023 மே மாதம் 22 - ப்ளூ கிரீன் மீடியா நடைமுறை விவகாரங்கள் செனலுக்காக ஏற்பாடு செய்த உலகப் பல்லுயிர் தினம் தொடர்பான அறிவியல் விவாதம் (பங்கேற்பு பேராதனைப் பல்கலைக் கழகத்தின் விவசாய பீட சிரேஷ்டப் பேராசிரியர் புத்தி மாரம்பே, இலங்கைப் பல்லினத்துவ நிறுவனத்தின் சிரேஷ்ட ஆலோசகரும் மற்றும் இலங்கை சுற்றாடல் தொழில் நிபுணர்கள் சங்கத்தின் தலைவருமான திருமதி ஸ்ரீயானி யசரத்ன மற்றும் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பாதுகாப்பு ஒதுக்கப் பகுதி முகாமைத்துவப் பணிப்பாளர் திரு மஞ்சுள அமரரத்ன)
2023 ஜுன் மாதம் 05 - ப்ளூ கிரீன் மீடியா நடைமுறை விவகாரங்கள் செனலுக்காக ஏற்பாடு செய்த உலக சுற்றாடல் தினம் தொடர்பான நிபுணர் கலந்துரையாடல் - ப்ளாஸ்டிக் மாசை ஒழித்தல் (பங்கேற்பு - சுற்றாடல் அமைச்சின் செயலாளர் மருத்துவ நிபுணர் திரு அனில் ஜாசிங்க, வயம்ப பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் திருமதி செவ்வந்தி ஜயக்கொடி)
2023 ஜுன் மாதம் 14 - ப்ளூ கிரீன் மீடியா நடைமுறை விவகாரங்கள் செனலுக்காக ஏற்பாடு செய்த வனசீவராசிகள் புகைப்படமாக்கலுக்கான ஒரு பிரவேசம் தொடர்பான நிபுணர்

கலந்துரையாடல் (பங்கேற்பு - பிரபல புகைப்படவியலாளர் திரு அத்துல ரணராஜா, பிரபல புகைப்படவியலாளர் திரு பிரசாத் ஹப்புஆராச்சி மற்றும் பிரபல புகைப்படவியலாளர் திரு மென்டிஸ் விக்ரமசிங்க)

2023 ஜூலை மாதம் 21 - ப்ளூ கிரீன் மீடியா ஆவணப்படமாக்கல் செனலின் கீழ் காட்டுப் பயணிகளுக்கான பயண நிகழ்ச்சித் திட்டத்தில் எரட்னா மங் பெதின் வண்ணத்துப்பூச்சி இயற்கை எளிலின் விழுமியத்தை கண்டறிதல் - பட்டர்ஃபிளை நேச்சர் ரிசர்வ் மற்றும் சிரிபா யாத்திரை தொடர்பான அறிக்கையிடல் நிகழ்ச்சித் திட்டம்

2023 ஜூலை மாதம் 31 - ப்ளூ கிரீன் மீடியா நடைமுறை விவகாரங்கள் செனலுக்காக ஏற்பாடு செய்த வனப் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தினம் பற்றிய நிபுணர் கலந்துரையாடல் (பங்கேற்பு - வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் வனப் பாதுகாப்பு அலுவலர் திரு ரத்னசிறி பெரேரா, வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் வனப் பாதுகாப்பு உத்தியோகத்தர் திரு என். ரீ. பி. கருணாரத்ன)

2023 ஆகஸ்ட் மாதம் 15 - ப்ளூ கிரீன் மீடியா நடைமுறை விவகாரங்கள் செனலுக்காக ஏற்பாடு செய்த வனசீவராசிகள் படமாக்கல் பற்றிய வேலையரங்கு - ஹோர்ட்டன்தென்ன முதலாவது குழு செயன்முறை சார்ந்த செயற்பாடுகள் அடங்கிய குறுங்-வீடியோ

2023 ஒற்றோபர் மாதம் 13 - ப்ளூ க்ரீன் மீடியா ஹரித அறுத செனலுக்காக ஏற்பாடு செய்த எக்ரொஸ் கிரீன் டேபிள் நிகழ்ச்சித் திட்டத்தின் பிரபல பறவையியல் வல்லுநர் திரு தீபால் வரகாகொட அவர்களுடன் இணைந்து நடத்திய பறவைகள் ஆய்வு தொடர்பான நிபுணர் கலந்துரையாடல்

